1992 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 315. திரு. வே. பெரியசாமி. மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர்.

315—

குழந்தைகள் நல மையம் அமைத்தல்.

*6396 திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெரியார் மாவட்டம், பெஜரிபாளையம், ஊசி மலை, தட்டக்கரை, சோழகணை, பெஜலட்டி, தேவர்மலை, ஒந்தணை, கோயில்நத்தம், பள்ளபாளையம், நஞ்சுண்டாபுரம், இந்திராநகர் (கீழ்பவானி) போன்ற இடங்களில் குழந்தைகள் நல மையங்கள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மையம் தொடங்கப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது அவசியம் இல்லை.

(ஆ) ஆகவே, இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 316. திரு. ச. காந்திராஜன். இருக்கையில் இல்லை. திரு. வ. சத்தியமூர்த்தி. மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

316—

பன்றி வளர்ப்புக்கு மானியத்துடன் கூடிய கடன்.

*2382 திரு. ச. காந்திராஜன்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண் வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பன்றி வளர்ப்புக்காக அளிக்கப்படும் மானியத்துடன் கூடிய கடனை அதிக அளவில் ஆடு, மாடுகள் வாங்க வழிவகை செய்ய வேண்டுமென்று மதிப்பீட்டுக் குழு 1985–86-ல் பரிந்துரை செய்துள்ளது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.